# இந்திய ரிசர்வ் வங்கி

சென்னை

# அறிவீர் – பணத்தாளின் குணம்; மணம்



# இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியியல் இலக்கிய வரிசை

பதிப்பாளர் : இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை
ஜூன் 2007

எல்லா உரிமைகளும் பதிப்பாளருக்கே, எங்கிருந்து நகல் எடுக்கப்பட்டது என்பதனை முறையாக ஒப்புதல் அளித்துத்தான் மறுவெளியீடு செய்ய அனுமதி

மேற்கொண்டு விபரங்களுக்கு தயவு செய்து
இணையதளம் www.rbi.org.in – ஐத் தொடர்பு கொள்க
அல்லது எங்களைத் தொடர்பு கொள்க

**இந்திய ரிசர்வ் வங்கி**
போர்ட் கிளாஸிஸ், ராஜாஜி சாலை,
சென்னை –600 001.
மின் அஞ்சல் : rdchennai@rbi.org.in

ஆக்கம்
சாந்தினி மூல்சந்தானி, அருண் விஷ்ணு குமார், ஹரிதாஸ் சரோதே, ஹரிதா தக்கர், ஜயந்தி N., P.S. ரவி, சித்தார்த் பிரகாஷ், நவாஸ் J., அலக்ஸ்சாண்டர் C.K., சந்திரன் A., நாயர் R.G.


பாரம்பரியமான சந்தையில்
ஓர் இனிய காலை நேரம்.
மாம்பழம் புதுசு!
கிலோ 25 ரூபாய்க்கு!
NEW FRUITS
மாம்பழம் புதுசாத்தான்
விக்கிறீங்க. ஆனா, பழைய
நோட்டைத் தரீங்களே.
நான் என்னய்யா
பண்றது? எங்கிட்ட இது மாதிரி
பழைய நோட்டுங்கதா
நிறைய இருக்கு.
எதிர்ல இருக்கும்
வங்கியிலே இந்தப் பழைய
நோட்டையெல்லாம் மாத்திக்க
வேண்டியது தானே?
ஐயா எனக்கு
வங்கிக் கணக்கு
ஒன்றும் இல்லையே.
கணக்கு வைச்சிருக்கணும்னு
கட்டாயமில்லை, எல்லா வங்கியோட எல்லாக்
கிளையும் இதுமாதிரி பழைய நோட்டுகளை
அவங்க கவுண்ட்டர்கள்ல மக்களுக்கு
மாத்திக் கொடுக்கணும்.
அப்படியா ஐயா!
நீங்க எனக்கு
உதவ முடியுமா?
நான் அந்த வங்கிக்குத் தான்
போய்க்கிட்டிருக்கேன்,
நீங்களும் வாங்க.


தனது உதவியாளரிடம் பழ வண்டியை விட்டுவிட்டு,
வியாபாரி அந்த மனிதருடன் வங்கிக்குச் செல்கிறார்.
நமது ரூபாய் நோட்டுகள் சிறப்பான காகிதத்தில் அச்சடிக்கப்படுகின்றன.
நாம அதைச் சரியா கையாளாததால சீக்கிரமா பழசாவும், பழுதாவும் போயிடுது.
BANK
புதுசா 1 ரூ, 2 ரூ, 5 ரூ நோட்டுங்களையே இப்போ பாக்க முடியறதில்லையே, ஏனுங்கய்யா?
குறைஞ்ச மதிப்புள்ள நோட்டுகளில்லையா! அடிக்கடிபல கை மாறுது. அப்போ ரொம்ப சீக்கிரமா கிழிஞ்சிம் போயிடுது. அதனால, அந்த மதிப்பு நோட்டுக்குப் பதிலா இப்போ நாணயமாக் கொடுக்கறாங்க.


வங்கி கேஷ் கவுன்ட்டரில்:
இவ்வளவு அழுக்கு நோட்டு சேர ரொம்பக் கஷ்டப்பட்டு உழைச்சிருப்பீங்க போலிருக்கு!
CASH
CASH
SOILED NOTES EXCHANGED
எங்கிட்ட பழம் வாங்க வரவங்க யாரும் இந்த நோட்டுகள வாங்கிக்க மாட்டேங்கறாங்க
நீங்க கொடுத்ததுலே கொஞ்ச நோட்டுக ரொம்ப டேமேஜ் ஆயிருக்கு. அதை எங்க பாங்கு மெயின் பிராஞ்ச்லே மாத்திக்குங்க.
நோட்டுகள் கிழிந்திருந்தால், சில துண்டுகள் இல்லாமலிருந்தால், சாயம் வெளுத்திருந்தால், எரிந்து போயிருந்தால், கழுவப்பட்டிருந்தால், கரையானால் அரிக்கப்பட்டிருந்தால் அவை "சிதைந்த நோட்டுகள் எனப்படும்."
ஏன் நோட்டுக்கெல்லாம் இப்போ 'பின்' அடிக்கமாட்டீங்கிறீங்க?
அடிக்கடி 'பின்' அடிப்பதால் நோட்டின் சில பகுதிகள் கிழிந்துவிடுகின்றன அதனால நோட்டுகளின் ஆயுளும் குறைஞ்சு போயிடுது. பின் அடிக்காத நோட்டைத்தான் ஏடிஎம் மிஷின்ல போட முடியும், நீங்களும் எடுத்துக்க சௌரியமாயிருக்கும். நோட்டு எண்ணுற மிஷினல் நீங்க எண்ணிக்கலாம்.
மற்றுமோர் ஊழியர் இவர்களோடு சேர்ந்துகொள்கிறார்.
எப்படி உபயோகப் படுத்தறதுன்னு நான் சொல்லித் தரேன்.
இந்த கூடிதத்தையெல்லாம் எடுத்துக்கிட்டு நீங்க மெயின் ஆபீஸ் போறீங்களில்லை, இவரையும் கூட்டிட்டுப் போங்களேன்
ஒரு நிமிஷம். நான் ஏடிஎம்முக்குப் போயிட்டு வந்துடறேன்.
அது ஒரு மெஷின். உங்க கணக்கிலிருந்து உங்க வசதிக்கேற்ப எப்பவேண்டு மென்றாலும், பணம் எடுத்துக்கலாம்.
ஏடிஎம்மா? அப்படீன்னா என்ன?
ATM


ஐயா, எங்கிட்ட சிறு நாணயங்கள் 50 பைசா, 10 பைசா மாதிரி நிறைய இருக்கு. நீங்க சொல்ற அந்த மெயின் பிராஞ்ச்லே இந்த நாணயத்தையும் மாத்திக்கலாமில்லே?
கண்டிப்பா


ரொம்பக் கிழிஞ்ச நோட்டை மாத்தறதுக்குன்னு எதுக்கு இன்னொரு பிராஞ்சுக்குப் போகணும்? இந்த பிராஞ்ச்லேயே மாத்தித் தந்தா என்ன?
கரன்ஸி செஸ்ட் அதாவது பணக் கருவூலகங்கள் இருக்கற கிளையில் தான் கிழிஞ்ச நோட்டை மாத்த முடியும்


இந்தியாவில் ரூபாய் நோட்டுகளை வெளியிடும் தனி அதிகாரம் இந்திய ரிசர்வ் வங்கிக்கு மட்டுமே உண்டு. சால்போனி, மைசூர், தேவாஸ், நாசிக் என்று 4 ஊர்ல நோட்டு அடிக்கறாங்க. அலிபூர், நொய்டா, மும்பை, ஹைதராபாத் என்று 4 ஊர்ல மத்திய அரசு நாணயங்களை தயார் செய்யறாங்க.
CHANDIGARH
NOIDA
NEW DELHI
JAIPUR
LUCKNOW
KANPUR
PATNA
SALBONI
KOLKATTA
AHEMDABAD
DEWAS
BHOPAL
NAGPUR
BHUBANESWAR
NASIK
MUMBAI
HYDERABAD
BENGALOORU
MYSORE
CHENNAI
TRIVANDRUM
அச்சகம்
நாணயக்கூடம்
இந்திய ரிசர்வ் வங்கி




ரிசர்வ் வங்கியின் விரிவாக்கப்பகுதியாகவே பணக்கருவூலங்கள் விளங்குகின்றன. இது மக்களுக்கு புதிய நோட்டுகளை வழங்குகிறது. அவர்களிடையே புழங்கும் அழுக்கு நோட்டுகளை ஏற்று தன்னகத்தே வைத்துக் கொண்டு, ரிசர்வ் வங்கிக்கு அவ்வப்போது அனுப்புகிறது. இதன் மூலம் மக்களிடையே சுத்தமான நோட்டுகளை புழங்குவதை உறுதி செய்கிறது. ரிசர்வ் வங்கி தனது பல கிளைகளில் உள்ள 18 பணம் வழங்கு துறை மூலம் இப்பணியை மேற்கொள்கிறது. 4000 க்கும் அதிகமான பணக்கருவூலகங்களும் சிறு நாணயக் கூடங்களும் நமது நாட்டிலுள்ளன.




நோட்டின் கிழிசலைப் பொறுத்து நோட்டுகளைத் திரும்பப் பெறுதல் விதிகளின்படி முழு மதிப்பு, பாதி மதிப்பு அல்லது மதிப்பேதுமில்லை என்று முடிவு செய்யப்படும்.
நல்லது ஐயா, நான் கிழிஞ்ச நோட்டுக்கு ரிசர்வ் வங்கிக்குத்தான் போகணுமினு நினைச்சிட்டிருந்தேன்.
CUT AND MUTILATED NOTES EXCHANGED HERE.
ஒரு நோட்டு வேண்டுமென்றே கிழிக்கப்பட்டிருந்தால், அல்லது அரசியல் செய்திகள் கோஷங்கள் ஏதேனும் எழுதப்பட்டிருந்தால் அல்லது அதன் பரப்பளவில் பாதிக்கும் குறைந்த அளவிலான துண்டாகக் கொடுத்தால் அல்லது எண்கள் வரிசையில் பெரும்பான்மை எண்கள் இல்லாவிடில் இத்தகைய நோட்டுகளுக்கு மாற்று மதிப்பு வழங்கப்படக் கூடாது.
ரிசர்வ் வங்கி, வங்கிகளை இந்த வாடிக்கையாளர் சேவை புரிந்திட ஊக்குவிக்கிறது. மேலும், பொது மக்கள் கிழிந்த நோட்டுகளை ரிசர்வ் வங்கிக்கு பதிவு செய்யப்பட்ட / காப்பீட்டுத் தபாலிலும் அனுப்பலாம். மாற்று மணியாடர், பணம் வழங்காணை அல்லது கேட்பு வரைவோலை மூலம் அனுப்பப்படும் அல்லது மனுதாரரின் வங்கிக் கணக்கிலேயே நேரடியாக வரவும் வைக்கப்படும்.
வங்கி, நோட்டுகளை மாற்றித்தர மறுத்தால் வாடிக்கையாளர் என்ன செய்ய முடியும்?
அந்த வங்கியின் மேலாளரைச் சந்தித்துப் பேசலாம். மேலும் ரிசர்வ் வங்கியில் செயல்படும் வங்கிக்குறை தீர்ப்பாளரிடத்தும் முறையிடலாம்.
திரும்பி வருகையில் ஒரு டீக்கடையில் நின்றனர்.
இது நல்ல நோட்டா?
ஆம். இப்போதுதான் பாங்கிலிருந்து வாங்கிட்டு வந்தேன்.
இது நல்ல நோட்டு என்று நான் எப்படிதெரிந்துக் கொள்வது?
இந்த விளம்பரத்தைப் பாருங்கள். நல்ல நோட்டின் முக்கிய குறிப்புகளை எல்லாம் இதில் விளக்கியிருக்கிறார்கள்.

**மாறித்தெரியும் நிறம் :**

பல்வேறு கோணங்களில்
சாயத்துப் பார்க்கையில்
மாறுகின்ற நிறம்.



**மறைந்திருக்கும் மதிப்பெண் :**

கண்ணுக்கு நேராக
பக்கவாட்டில் பார்க்கத்
தெரியும்.



**அடையாளக்குறியீடு :**

பார்வைக் குறை உள்ளவர்கள்
தடவி உணர்ந்துக்கொள்ள.










**நீர்க்குறியீடு :**

மகாத்மா காந்தியின்
திரு உருவம் தத்ரூபமாய்
(ஒளி நிழலும்)

**விட்டுவிட்டுத் தெரியும் பாதுகாப்பு இழை :**

உள்ளே 'பாரத்' என்று
இந்தியிலும் 'RBI' என்று
ஆங்கிலத்திலும் மாறி மாறி
போடப்பட்டிருக்கும்.







**தடவி உணரும் அச்சு :**

சில பகுதிகள் மேலெழுந்தவாறு
அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.
அவைகளைத் தடவி உணர்ந்து
கொள்ளலாம்.


உங்க கிளை, கள்ள நோட்டைக் கண்டு பிடிச்சா அதை என்ன செய்வாங்க?
வங்கிகள் அதை மீண்டும் புழக்கத்தில் விடாமல் முடக்கி வைக்க வேண்டும். காவல் துறைக்கும் தெரியப்படுத்த வேண்டும்.
கள்ளநோட்டு அடிப்பது, புழக்கத்தில் விடுவது, வைத்திருப்பது போன்ற செயல்கள் தண்டனைக்குரிய குற்றம். அபராதம் அல்லது சிறை அல்லது இரண்டுமே விதிக்கப்படலாம்.


ரிசர்வ் வங்கி நம்ம ஊர் பொருட்காட்சியிலே அவர்களது அரங்கத்தை திறந்திருக்காங்க. நீங்க அங்க போயி மேலும் விபரங்களைத் தெரிஞ்சுக்கலாமே.


சில நாட்கள் கழித்து, வியாபாரியும் அவரது குடும்பமும் பொருட்காட்சிக்குச் சென்று ரிசர்வ் வங்கியின் அரங்கத்தைப் பார்த்தது.
TRADE FAIR
RBI
STALL


அரங்கத்தினுள்ளே :
சுத்தமான நோட்டுகளைப் பற்றி எனக்கு கொஞ்சம் தெரியும். நம்ம நாட்டுப் பண–நாணயம் பற்றி மேல விபரங்களைச் சொல்ல முடியுமா?
சாதாரண மனிதனுக்கு பணம் என்றால் ரூபாய் நோட்டுகளும், நாணயங்களும் தான். 3785 கோடிக்கும் மேலாக ரூபாய் நோட்டுத் தாள்களின் எண்ணிக்கை நம் நாட்டில் இருக்கிறதென்றால் நீங்கள் அசந்து போய் விடுவீர்கள் அல்லவா?
60,000...!
இவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் இருக்கும் நோட்டுகளை எண்ண, பரிசீலிக்க, புழக்கத்திற்கு விட லாயக்கு, லாயக்கற்றவை என்று பிரிக்க, பின்னர் லாயக்கற்றவைகளை அழிக்க, ரிசர்வ் வங்கி இயந்திரங்களைப் பயன்படுத்தத் தீர்மானித்து இதற்கென்றே 'சிவிபிஎஸ்' (CVPS) என்ற நவீன இயந்திரத்தை எங்கள் எல்லாக் கிளைகளிலும் வைத்திருக்கிறோம். 1 மணி நேரத்தில் 60,000 பணத்தாட்களை ஒரு "சிவிபிஎஸ்" இயந்திரம் எண்ணிப் பிரித்து அழித்துவிடும்.
ரிசர்வ் வங்கி சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாப்பதிலும் கவனமாக இருக்கிறது. எனவே, அழுக்கு நோட்டுகளை எரிப்பதற்குப் பதிலாக, இப்போது சிறு சிறு துகள்களாக்கிப் பின்னர் கட்டியாய் பிடித்து, வெளியிடும் புகை ஏதும் கக்காத நவீன இயந்திரத்தைப் பயன்படுத்துகிறது.
பணத்தைப் புழக்கத்தில் விடுவதிலிருந்து அழுக்கு நோட்டுகளை அகற்றுவது வரை நான் நிறையத் தெரிந்து கொண்டேன். நன்றி




சுத்தமான ரூபாய் நோட்டுகளைத் தேவையான அளவு கொடுப்பதோடு மட்டுமன்றி அதன் மதிப்பை நிலை நிறுத்துவதில் இந்திய ரிசர்வ் வங்கி உறுதியாய் இருக்கிறது. அப்போது தான் மக்கள் தொடர்ந்து நமது நாட்டுப் பண-நாணயத்தின் மீது தங்கள் நம்பிக்கையையும், பற்றையும் வளர்த்துக் கொள்ள முடியும் என்று எண்ணி உங்கள் பணியில் எங்களை அர்ப்பணித்துக கொள்கிறோம்.

# இந்தியப் பண-நாணயம் - தேசத்தின் பெருமை

பணத் தாள்கள் ஒரு நாட்டின் பண்பாடு வரலாறு பற்றியும் அதன் பெருமையைப் பற்றியும் எடுத்துக் கூறவல்லது. இந்தியப் பண—நாணயம் என்பது ரூபாய் நோட்டுகளைக் குறிப்பது. நாணயங்கள் இங்கு பைசா என்றழைக்கப்படுகின்றன. ஒரு ரூபாய்க்கு 100 பைசா.

- புதிய நோட்டுகளை அச்சடிப்பதற்கும், வழங்குவதற்கும் ரிசர்வ் வங்கி ஒன்று தான் தனி அதிகாரம் கொண்டது.
- ஜூலை 2005 முதல் ஜூன் 2006 முடிய உள்ள ஒரு வருட காலக் கணக்கில் நோட்டுகள் அச்சடிக்க ரூ.1034 கோடி செலவிட்டது.
- புதிய நோட்டுகள் அச்சடிப்பதென்பது நாட்டுக்குச் செலவு. நோட்டுகளின் சராசரி ஆயுட்காலத்தை நீட்டித்து இச்செலவைக் கணிசமாகக் குறைக்க முடியும்.
- சராசரி ஆயுட்காலமென்பது நமது நோட்டுகளுக்கு 6 மாதமாகத்தான் இருக்கிறது. சரியாகக் கையாளுவது மூலம் இதன் ஆயுட்காலத்தை உங்களால் நீட்டிக்க முடியும்.
- ரிசர்வ் வங்கி அலுவலகங்களிலும், குறிப்பிட்ட பல வங்கிக் கிளைகளிலும் நோட்டுகளையும் நாணயங்களையும் மாற்றிக் கொள்ளலாம்.
- அழுக்கடைந்த / பழைய நோட்டுகளை அனைத்து வணிக வங்கிக் கிளைகளிலும் மக்கள் மாற்றிக் கொள்ளலாம்.
- நெடுக்காக, குறுக்காக, பாக்கவாட்டில் கிழித்து, கிழிசல் வரிசை எண்களில் இல்லாமல், நோட்டு இரு துண்டுகளாக இருந்து, இரண்டு துண்டும் ஒரே நோட்டைச் சேர்ந்தவையாக இருப்பின், ஒட்டப்பட்ட இந்த இரு துண்டு நோட்டுகளை அழுக்கு நோட்டாக அனைத்து வங்கிக் கிளைகளும் ஏற்று மாற்று மதிப்பினை மக்களுக்கு வழங்கிட வேண்டும்.
- இந்திய அரசு, நாணயங்களைத் தயாரித்து ரிசர்வ் வங்கிக்கு அளிக்கிறது. ரிசர்வ் வங்கி அவைகளைப் புழக்கத்தில் விடுகிறது.
- போதுமான முகாந்திரமில்லாமல் சிறுமதிப்பு – நோட்டுகள்/நாணயங்களை வாங்க மறுத்தல் அல்லது இச்சேவைகளுக்குக் கட்டணம் வசூலித்தல் போன்ற செயல்களில் வங்கிகள் ஈடுபட்டால், வங்கிக் குறை தீர்ப்பாரை அணுகலாம்.
- கள்ள நோட்டு அடிப்பதும், நாணயங்களை உருக்குவதும் நீதிமன்றத்தால் தண்டனை அளிக்கக் கூடிய குற்றங்களாகும்.

சவாலாக இருக்கும் சில குறிப்பிட்ட பொதுப் பொறுப்புகளை ஏற்று திறம்பட நடத்துவதில், நமது நாட்டின் மைய வங்கி என்ற தனிப் பெரும் அந்தஸ்தைப் பெற்ற இந்திய ரிசர்வ் வங்கி உறுதியாய் இருக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி, பொது நலன் கருதிச் சேவை செய்யும் ஒரு பொது நிறுவனம். சாதாரண மனிதர்களுக்கும் நிதியியல் அறிவு, நிதியியல் கல்வி இவற்றை அளிக்க சில முயற்சிகளை ரிசர்வ் வங்கி சமீப காலமாக எடுத்து வருகிறது. அதன் வாயிலாக, வங்கிகளின் சேவைகளில் சாதாரண குடிமக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள், அவர்கள் முன் இருக்கும் வாய்ப்புகள் என்னென்ன, அவர்களது உரிமைகள், கடமைகள் என்னென்ன என்பவை தெரிவிக்கப்படும்.

இத்தகைய செயல்நோக்குடன், "இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியியல் இலக்கிய வரிசை" என்ற தலைப்பில், படங்களுடன் கூடிய சிறு புத்தகங்கள் சிலவற்றை இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட உள்ளது. நிதியியல் விபரங்களில் மக்கள் அனைவரும் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் இவை வெளியிடப்படுகின்றன.

இவ்வெளியீடுகளில் ஒன்றாக "அறிவீர் – பணத்தாளின் குணம், மணம்" என்ற தலைப்பில் இச்சிறு புத்தகம் வெளியிடப்படுகிறது. பண–நாணய நிர்வாகம் ரிசர்வ் வங்கியின் மிக முக்கியமான பணிகளில் ஒன்று, புதிய நோட்டுகள் வழங்கப்பட்டு, பழைய நோட்டுகள் அகற்றப்பட்டு அழிக்கப்படுகின்றன. நோட்டுகளின் வடிவம், உற்பத்தி, நாடெங்கிலும் வழங்கல், அழுக்கு நோட்டுகளை ஏற்றுக் கொள்ளுதல், பின்னர் அழித்தல் போன்ற பணிகள் ரிசர்வ் வங்கியில் நிர்வகிக்கப்படுகின்றன. ஆங்கிலம், இந்தி என்ற இரு மொழிகளோடு 15 தேசிய / வட்டார மொழிகளிலும் ரூபாயின் மதிப்பு அச்சடிக்கப்படுகிறது. பல்வேறு மொழிகள், பல்வேறு இனங்கள், பல்வேறு பகுதிகள், பல்வேறு பழக்க வழக்கங்கள் என்ற வேற்றுமையில் ஒற்றுமை பெறும் நமது கலாச்சாரத்திற்கேற்ப நாட்டிலுள்ள அனைத்துப் பகுதி மக்களிடையேயும் அவரவர் மொழியிலேயே வங்கிச் சேவைகள் பற்றிய விபரங்களை எடுத்துச் சொல்ல இந்திய ரிசர்வ் வங்கி உறுதிமேற்கொண்டுள்ளது.

இந்த வரிசையில் பிறநூல்கள் : "வங்கிக்கு வாருங்கள் வளமாக வாழுங்கள்."